மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று தொகையை அதிகமாக வைப்பதும் கவர்ச்சிக்கு ஒரு காரணம் ஆகும். அந்த வகையில் சிறப்பு குலுக்கலை ஒரு கோடி ரூபாய்க்கு உயர்த்தலாமா என்று பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. ஒட்டு மொத்த மாக மற்ற மாநிலங்களோடு போட்டிபோடுகின்ற தன்மைகள் இருக்கின்றபோது இப்படிப்பட்ட நிலமைகள் வருகின்றன. எல்லா மாநிலங்களும் ஒரு சட்ட வரம்புக்குள் உச்ச வரம்புக்குமேல் போகக்கூடாது என்ற முறையில் தொகை நிர்ணயிக்கப்பட்டால் அந்த அடிப்படையில் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படமாட் டார்கள். அதே சமயத்தில் இதன் மூலம் கிடைக்கின்ற பலனும் ஒரு சமாதானமாக ஒரு நிதானமான வகையில் கிடைப்பதற்கு வழி வகை ஏற்படும்.

மணப்பாறை நகரில் தாலுகா அலுவலகம் கட்டும் திட்டம்.

214—(*வினா எண். 17805)—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை நகரில் தாலுகா அலுவலகம் புதிதாகக் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அப்புதிய கட்டிடம் கட்ட நிலம் தேர்ந் தெடுக்கப்பட்டு விட்டதா?

(இ) கட்டிட மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ), (ஆ) மற்றும் (இ) அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பறை நகரில் தாலூகா அலுவலகம் பல வருடங் களாக இயங்கிக்கொண்டிருக்கிறது. இருந்தும் அங்கு கட்டிடம் சரி யாக இல்லாத சூழ்நிலை இருப்பதால் அதிகாரிகளும், பொது மக்க ளும் பல இன்னல்களுக்கு ஆளாகவேண்டியிருக்கிறது. பொதுமக்கள் நலன் முன்னிட்டு தாலுக்கா அலுவலகம் கட்ட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் 17 புது வட்டங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு 166 தாலுக்காக்களில் 150 தாலுக்கா அலுவலகங்கள் அரசு கட்டிடத்தில் இருக்கின்றன. 17 தாலுக்கா அலுவலகங்கள் தான் வாடகை கட்டிடத்தில் இருக்கின்றன. விரைவில் நிதி ஒதுக்கி மற்ற வட்டாட்சியாளர் அலுவலகங்களை அரசு கட்டிடத்தில் கொண்டு வருவதற்கு அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது.

1984 மார்ச் 8]

திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை வெகு விரைவில் வருவாய் கோட்டமாக ஆகிவிடும் என்ற செய்திகளை அறிகிறேன். அதை முன்னிட்டாவது அந்த தாலுக்கா அலுவலகத்திற்கு முன்னுமை கொடுத்து கட்டிடத்தை விரைவில் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வருவாய் கோட்டமாக ஆகின்ற செய்தி மாண்புமிகு உறுப்பினர் அறிந்த அளவுக்கு நான் இன்னும் அறியவில்லை. ஆக அது வருகிறபோது அதுவும் யோசிக்கப்படும்.

குத்தகைதாரர்களைப் பதிவு செய்வதற்கான குழுக்கள்.

215—*வினா எண். 17941—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தகைதாரர்களைப் பதிவு செய்வதற்கு உதவியாக 'குழுக்கள்' அமைக்க அரசு முடிவெடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அக்குழுக்களின் அதிகாரங்கள் என்னென்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) அக் குழுக்களின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளன;—

1. நில உடைமையாளர், அந்நிலத்தைப் பயிரிடும் குத்தகைதாரர் ஆகியோரது பெயர், முகவரி ஆகியவற்றுடன் வட்டத்தில் அமைந்துள்ள நிலம் தொடர்பான தகவல்களையும் விவரங்களையும் அந்தக் குழு உறுப்பினர்கள் சேகரிப்பார்கள்.

2. சேகரிக்கப்பட்ட தகவல்களையும் விவரங்களையும் சம்பந்தப்பட்ட நிலத்திற்கு அதிகார வரம்புள்ள அதிகாரிக்கு (வட்டாட்சியருக்கு) குத்தகைப் பதிவு சம்பந்தமான தனது அலுவல்களை மேற்படி சட்டத்தின் கீழ் செவ்வனே ஆற்ற உதவி செய்வார்கள்.

(முற்பகல் 9-20)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழுக்களிலே இடம் பெறும் உறுப்பினர்கள் நிரந்தர உறுப்பினர்களாக இருப்பார்களா அல்லது அவர்களது